FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

~~(குற்றவிசாரணை முறை சட்டம் 154 இன் கீழ்)~~ Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040863

1. District : மாவட்டம் Hosur PS: காவல்நிலையம் Year: ஆண்டு 2026 FIR No.: 06/ முதஅ எண் Date: 16.10.2026 நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் மற்றும் மோசடி Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)

(iii) Act சட்டம்: Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 14.10.2026 Date to : நாள் வரை -

Time Period : நேர அளவு Time from : மதியம் 03.1Hours நேரம் முதல் Time to : நேரம் வரை -

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.10.2026 Time : நேரம் 18.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக நேரில் வந்து புகார் அளிக்கப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அரிமனம் மாரியம்மன் கோவில் அருகில் சுமார் 18 கி.மீ, தென் திசை

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 23.06.1983 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி [illegible], தெற்கு தெருவம்பட்டி, தேன்பாணையூர் அஞ்சல், அரிமனம் வழி, தேன்கனிக்கோட்டை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. பாண்டியராஜன், நாமக்கல் மாவட்டம் அலுவலர், தேன்பாணையூர், தேன்கனிக்கோட்டை மாவட்டம்.
2) திரு. முத்து, [illegible] நாமக்கல் மாவட்டம், தேன்பாணையூர், தேன்கனிக்கோட்டை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்


- தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)



13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

16.10.2026
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 16.10.26
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.10.2026

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

Attachment to Column 12 of First Information Report in Pudukkottai V&AC Cr.No.06/2026

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 15.10.2026–ஆம் தேதி மாலை 06.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது சே.ஆரோக்கியசாமி, த/பெ சேசு உடையார், 53A, தெற்கு குடியிருப்பு, கீழப்பனையூர் அஞ்சல், அரிமளம் வழி, திருமயம் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் புதுக்கோட்டை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கம்யூட்டரில் டைப்செய்த ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர்– சே.ஆரோக்கியசாமி, வயது 45/2026, த/பெ சேசு உடையார், 53A, தெற்கு குடியிருப்பு, கீழப்பனையூர் அஞ்சல், அரிமளம் வழி, திருமயம் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம், பெறுநர்–காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, புதுக்கோட்டை. அய்யா, நான் திருமயம் தாலுகா, தெற்கு குடியிருப்பு கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 2016ஆம் ஆண்டு எனது அக்கா திருமதி.ரெஜினாமேரி மகள் திருமதி.ஜெசிலாமேரி என்பவரை திருமணம் செய்தேன். எனது திருமணத்திற்கு பிறகு என்னுடன் எனது அக்காவும், அவரது கணவர் செபஸ்தியானும் வசித்து வருகிறார்கள். எனது அக்கா கணவருக்கு சொந்த ஊர் முக்காணிப்பட்டி. எனது அக்கா கணவர் திரு.செபாஸ்தியான் கடந்த 17.09.2026ஆம் தேதி உடல்நிலை சரியில்லாத காரணத்தால் இறந்துவிட்டார். அதனால் எனது மனைவி கடந்த 07.10.2026ஆம் தேதி எனது மச்சானின் இறப்பு சான்றிதழ் சம்மந்தமாக கீழப்பனையூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.பாண்டியராஜனை, அவரது அலுவலகத்தில் சந்தித்தார். அப்போது கிராம நிர்வாக அலுவலர் எனது அக்கா கணவரின் ஆதார் அட்டை, ரேசன்கார்டு, எனது மனைவியின் ஆதார்கார்டு ஆகியவற்றின் ஜெராக்ஸை வாங்கி கொண்டுள்ளார். அதன்பிறகு, எனது மைத்துனரை முக்காணிப்பட்டியில் அடக்கம் செய்ததால், வடவாளம் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து எனது மைத்துனரின் இறப்பு பதிவு செய்யப்படவில்லை என்று சான்று வாங்கி வரும்படி கூறியுள்ளார். மேலும் எனது மைத்துனரின் இறப்பு சான்று வழங்க ரூ.2000/– வேண்டும் என்று கூறியுள்ளார். மேற்கண்ட விபரத்தை எனது மனைவி என்னிடம் கூறினார். நான் மறுநாள் 08.10.2026ஆம் தேதி மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை என்ற சான்றை வடவாளம் கிராம நிர்வாக அலுவலர் அவர்களிடம் பெற்று அன்றே கீழப்பனையூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு கிராம நிர்வாக அலுவலர் இல்லை. அதனால் அங்கு இருந்த முன்னாள் கிராம உதவியாளர் திரு.முத்துவிடம் கிராம நிர்வாக அலுவலர் பற்றி கேட்டேன். அதற்கு அவர் என்ன விபரம் என்று கேட்டார். நான் விபரத்தை சொன்னேன். உடனே அந்த சர்டிபிகேட்டை அவர் வாங்கி கொண்டு கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். நான் அவரிடம் அந்த சர்டிபிகேட்டை கொடுத்தேன். அதன்பிறகு கடந்த

09.10.2026ஆம் தேதி முத்து எனக்கு போன் செய்து அவரை மறுநாள் ஒத்தகுடியிருப்பில் வந்து சந்திக்கும்படி என்னிடம் கூறினார். நானும் சரி என்று சொன்னேன். ஆனால் நான் அங்கு போகவில்லை. கடந்த 12.10.2026ஆம் தேதி கிராம நிர்வாக அலுவலர் திருபாண்டியராஜனை நேரில் சந்தித்தேன். அப்பொழுது அவர் ஆன்லைனில் சலான் கட்டிட்டு வாங்க, நான் ஏத்திவிடுறேனு சொன்னார். ஆனால் ஆன்லைனில் ஏற்ற முடியாது, கிராம நிர்வாக அலுவலர் தான் ஆன்லைனில் ஏற்ற முடியும் என்று இசேவை மையம் மற்றும் கம்யூட்டர் சென்டரில் சொன்னார்கள். அதனால் நான் கடந்த 14.10.2026ஆம் தேதி கிராம நிர்வாக அலுவலரை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அவர் ஒரு நம்பரை எழுதி கொடுத்து ஆன்லைனில் பணத்தை கட்டிவிட்டு வரச்சொன்னார். நானும் அவர் சொன்ன பாண்டியன் கடைக்கு சென்று கேட்டேன். அதற்கு அவர்கள் கிராம நிர்வாக அலுவலர் மூலம் 30 நாட்களுக்குள் இறப்பு சான்றிதழுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றும், இசேவை மையம் மற்றும் கம்யூட்டர் சென்டர்களில் தனியாக விண்ணப்பிக்க முடியாது என்றும் அதற்காக தனியாக பணம் கட்ட தேவையில்லை என்றும் சொன்னார்கள். அதனால், நான் உடனே கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று அவரை பார்த்து விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் ஆதார் கார்டு, காசு ஆகியவற்றை முத்துவிடம் கொடுங்கள், நான் அவரிடம் சொல்கிறேன் என்று சொன்னார். அதன்பிறகு மதியம் 03.14 மணிக்கு முத்து எனக்கு போன் செய்து ரூ.1500/–ம், ஆதார் அட்டையும் எடுத்து கொண்டு அலுவலகத்திற்கு வந்து அவரை பார்க்கச் சொன்னார். நான் அரிமளத்திற்கு சென்று மாரியம்மன்கோவில் அருகில் முத்துவை பார்த்து, ஆதார் அட்டையை அவரிடம் கொடுத்தேன். அதை வாங்கி கொண்ட அவர் தான் கேட்ட பணம் ரூ.1500/– எங்கே என்று கேட்டார். அதற்கு நான் என்னிடம் இப்போது பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் இப்போது உங்கள் மைத்துனர் இறப்பு சான்றிதழுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியாது, பணம் கொடுத்தால்தான் கிராம நிர்வாக அலுவலரின் போர்டெலில் விண்ணப்பிப்பேன் என்று சொன்னார். நான் ஒன்றும் சொல்லாமல் வந்து விட்டேன். எனக்கு லஞ்சம் கொடுத்து எனது மைத்துனரின் இறப்பு சான்றிதழ் வாங்க விருப்பம் இல்லை. எனவே இன்று 15.10.2026ஆம் தேதி மாலை 06.30 மணிக்கு புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திற்கு வந்து, எனது மைத்துனரின் இறப்பு சான்றிதழை எனக்கு வழங்க ரூ.1,500/– லஞ்சம் கேட்ட கீழப்பனையூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.பாண்டியராஜன் மற்றும் அவருக்கு துணையாக உள்ள முன்னாள் கிராம உதவியாளர் திரு.முத்து ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கணினி மூலம் தயார் செய்யப்பட்ட புகார் மனுவை தங்களிடம் வழங்கினேன். இப்படிக்கு (ஒப்பம்) /சே.ஆரோக்கியசாமி, 15.10.2026.

Sir, Received the above computer typed complaint on 15.10.2026 at 06.30 pm. The genuineness of the complaint was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified

through sources and found to be bad. Hence, I registered a case in Pudukkottai Vigilance and Anti-Corruption Cr.No.06/2026 u/s 7 (a) of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018 at 07.15 am today on 16.10.2026 and took up for investigation. (Sd-) A.Peter, Inspector of Police, /V&AC/PK.

Original FIR along with Original Computer type complaint of Tr.J.Arockiyasamy, S/o Jesu Udaiyar, No.53A, Therku Kudiyeerupu, Keelapanaiyur Post, Arimalam Via, Thirumayam Taluk, Pudukkottai District is submitted to the Hon'ble Principal District Sessions Judge for trial of case under Prevention of Corruption Act, Pudukkottai and a copy of FIR is submitted to the Director Vigilance and Anti-Corruption, Chennai.

16.10.2026
A.PETER.
Inspector of police,
Vigilance and Anti-Corruption,
Pudukkottai.